***DEPOSITION OF WITNESS***

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

\- - - - -

## *IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.*

| | | |
|---|---|---|
| ***Case No.*** | : | ***SC No. 11 / 2019*** |
| ***Deposition of witness for*** | : | ***PW : 3*** |
| ***Name*** | : | **திரு. இளங்கோவன்** |
| ***Father's Name*** | : | |
| ***Village*** | : | |
| ***Taluk*** | : | |
| ***Caste*** | : | |
| ***Calling*** | : | |
| ***Religion*** | : | |
| ***Age*** | : | |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of* ***10.03.2025***

எதிரிகள் *1* முதல் *3* மற்றும் *6* ஆஜர். எதிரிகள் *4,5* ஆஜரில்லை. பிரிவு *317* குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து, பணி ஓய்வு பெற்று, மதுரை திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். 14.05.2017 ம் தேதி நான் பெருங்காமநல்லூர் கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்த போது, கூடுதல் பொறுப்பாக குப்பல்நத்தம் கிராமத்தையும் கவனித்து வந்தேன். நானும், எனது கிராம உதவியாளர் திருமதி.காந்தி என்பவரும் கடந்த 14.05.2017 ம் தேதியன்று காலை 09.00 மணியளவில், மேற்படி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் பணியில் இருந்தோம். அப்போது, வீரனாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த, கந்தசாமி மகன் பெரியகார்த்திகேயன் என்பவரும், அவரது மகன் சின்னச்சாமி என்பவரும் எனது அலுவலகத்திற்கு வந்து, அவரது மகள் சுகன்யா என்பவரை எரித்துக் கொன்றுவிட்டதாகவும், அது சம்பந்தமாக தங்களிடம் ஆஜராகியுள்ளதாகவும் தெரிவித்தனர். நான்

அவர்களிடம், அவர்கள் சொன்னதை என் கைப்பட எழுதி வாக்குமூலம் வாங்கிக் கொண்டு, காவல் நிலையத்திற்கு போன் செய்து, அவர்கள் ஒரு காரில் அங்கு அவர்களோடு நானும் மேற்படி பெரியகார்த்திகேயன் மற்றும் சின்னச்சாமி எல்லாரும் பேரையூர் காவல் நிலையத்திற்கு இன்ஸ்பெக்டர் அலுவலகத்திற்குச் சென்று, அங்கு எனது வாக்குமூலத்தையும், அவர்களிடம் அவர்களை ஒப்படைத்ததற்கான எனது பரிந்துரை கடிதத்தையும் கொடுத்தேன். அவர்கள் இதன் பேரில், அவர்கள் இருவரையும் கைது செய்து, நாங்கள் இருக்கும் போது, விசாரணை செய்தார்கள். விசாரணையின் அடிப்படையில், மேற்கொண்டு வீராளாம்பட்டி கிராமத்தில் சுமார் 01.00 மணியளவில், சுகன்யாவின் தாலிக் கயிறு, மெட்டி, காதில் தோடு, இவை எல்லாம் எங்களை கூட்டிச் சென்று எங்கள் முன்னால் எடுத்து ஆஜர் படுத்தினார்கள். 14.05.2017 ம் தேதி பெரியகாத்திகேயன் மற்றும் சின்னச்சாமி கொடுத்த வாக்குமூலத்தில், அவரது மகள் சுகன்யா என்பவர் T கல்லுப்பட்டியில் அப்பலோ ஆஸ்பத்திரியில் நர்சாக பயிற்சி எடுத்தபோது, அதில் இருந்து, ஈரோடு சாந்தி ஆஸ்பத்திரிக்கு அங்கிருந்து பயிற்சிக்கு அனுப்பி இருந்துள்ளார்கள். பயிற்சியின் போது, ஈரோடு கங்காபுரம், சித்தோடையில் உள்ள கோபலகிருஷ்ணன் மகன் பூபதி என்பவரோடு பழக்கம் ஏற்பட்டு, திருமணம் செய்து கொண்டார்கள். இதன் பேரில், ஒரு வாரம் கழித்து இந்த திருமண நிகழ்வை தன் தந்தையிடம் போன் மூலமாக சொல்லியிருக்கிறார். அவர்கள் நேரடியாக ஈரோடு சென்று, அங்கு விசாரித்த போது, அவர்கள் பதிவு திருமணம் செய்து கொண்டதாகவும், அங்குள்ள போலிஸ் ஸ்டேசனில், இவர்களைப் பற்றி புகார் செய்திருக்கிறார்கள். அதன் பேரில், இவர்களை பேசி, மகள் சுகன்யாவை மட்டும் தங்களது ஊருக்கு அழைத்து வந்திருக்கிறார்கள். வந்த பின்பு, மறுநாளே அவர் ஈரோடு சென்றுவிட்டார். அவர்கள் திருப்பி 30.03.2017 ம் தேதி கார்த்திகேயன், அவரது மனைவி செல்லம்மாள், சகோதரி லெட்சுமி ஆகியோர் அங்கு சென்று சமாதானம் பேசி, கோயில் திருவிழா நடப்பதாகக் கூறி 15.04.2017 ம் தேதி

வீராளாம்பட்டிக்கு அழைத்து வந்துள்ளார்கள். அன்று இரவே அவரை எரித்து கொன்றிருக்கிறார்கள். என்னிடம் காட்டப்படும் பேரையூர் காவல் ஆய்வாளரிடம் நான் கொடுத்த அறிக்கையினை நான் எனது கைப்பட எழுதியது தான். **எதிரி பெரியகார்த்திகேயன் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தின் அறிக்கை அதசாஆ.2 ஆகும்.** 14.05.2017 ம் தேதி எதிரி பெரியகார்த்திகேயன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். எதிரிகள் பெரியகார்த்திகேயன் மற்றும் சின்னச்சாமியை காவல் ஆய்வாளர் விசாரணை செய்த போது,

1) 5 லிட்டர் வெள்ளை கேன்

2) தாலி கயிறு

3) 4 ஜோடி மிஞ்சி

4) கவரிங் தோடு இரண்டு

ஆகியவற்றை பெரியகார்த்திகேயன் வீட்டில் இருந்து கைப்பற்றினார்கள்.

**மேற்படி பொருட்களை கைப்பற்றியதற்கான அத்தாட்சி அதசாஆ.3 ஆகும். மேற்படி கைப்பற்றப்பட்ட 1 முதல் 4 பொருட்கள் முறையே அசாபொ.1 முதல் அசாபொ.4 ஆகும்.** 14.05.2017 ம் தேதி பெரியகார்த்திகேயன் என்பவரும், சின்னச்சாமி என்பவரும் மங்கள்ரேவு என்ற இடத்தில் பஞ்சர் கடையில் இருந்து 2 டயர்கள் வாங்கி, அவற்றை வீட்டிற்குக் கொண்டு சென்று, மங்கள்ரேவு கிராமத்தில் உள்ள சர்வே எண்.7 ஓடையில் அந்த டயரை வைத்துவிட்டு, மகன் பாண்டிக்கண்ணன் என்பவர் மூலம் பெட்ரோல் மற்றும் ஜீனி யை வாங்கி வரச் சொல்லி, அவற்றையும் டயருக்கு கீழ் மறைத்து வைத்துவிட்டு, அன்று இரவு மகள் சுகன்யாவை, அத்தை லெட்சுமி, செல்லம்மாள், சின்னச்சாமி, சுந்தர் என்ற சுந்தர்ராஜ் ஆகியோருடன் வந்து, ஏற்கனவே 1 லிட்டர் பாட்டிலில் யூரியா கலந்த நீரைக் கொண்டு வந்து, சுகன்யா என்பவருக்கு ஊற்றி, அவர் மயக்கமான நிலையில், உயிர்போகும் நிலையில் இருக்கும் போது, அவரது கழுத்தை நெறித்து, டயரில் படுக்க வைத்து, தீயிட்டு கொழுத்தியதாக, எனது கிராமத்தில்

14.05.2017 ம் தேதி என்னிடம் வாக்குமூலம் கொடுத்தபோது, மேற்படி விபரத்தை என்னிடம் தெரிவித்தார்கள். சேடபட்டி உதவி காவல் ஆய்வாளர் அவர்களும், பேரையூர் காவல் ஆய்வாளரும் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

சம்பவம் எப்படி செய்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். நான் பெருங்காமநல்லூர் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் குப்பல்நத்தம் கிராமத்திற்கு பொறுப்பு அதிகாரியாக இருந்தேன் என்றால் சரிதான். பெருங்காமநல்லூர் கிராமத்திற்கும் குப்பல்நத்தத்திற்கும் குறுக்குப் பாதையில் சென்றால் சுமார் 4 கிமீ தூரம் இருக்கும். மேற்படி இரண்டு ஊர்களுக்கும் நான் கிராம நிர்வாக அதிகாரி என்ற முறையில் அவ்வப்போது சென்றுவருவேன். நான் மேற்படி கிராமங்களுக்கு எந்தெந்த தேதிகளில் செல்வேன் என்றால் ஒருநாள் பெருங்காமநல்லூருக்கும் ஒருநாள் குப்பல்நத்தத்திற்கும் சென்று வருவேன். 14.05.2017 ம் தேதி நான் குப்பல்நத்தத்தில் இருப்பதாக 1,2 எதிரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டேனா என்றால் இல்லை. கொலை சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இடம் மங்கல்ரேவு ஓடை என்பது, என்னுடைய ஆளுகைக்கு உட்பட்டது அல்ல. அதற்கு அமுதா என்பவர் கிராம நிர்வாக அலுவலர் என்றால் சரிதான். அன்றய தினம் அவர் லீவில் இருந்ததால், ஓடை பகுதி யாருடைய ஆளுகைக்கு உட்பட்டது என்று தெரியாததால் போலிசார் என்னை வரச் சொன்னார்கள். அதன் அடிப்படையில், நான் மங்கல்ரேவு ஓடைக்கு போலிசாருடன் சென்றேன். அவ்வாறு போலிசாருடன் சென்றபோது, போலிசாருடன் அந்த இடத்தை நாங்கள் சுற்றிப் பார்த்தோம். அவ்வாறு சுற்றிப் பார்த்த போது நாங்கள் எதிரிகள் வீட்டிற்குச் செல்லவில்லை. எதிரிகள் ஊர் வீராளாம்பட்டி கிராமம் என்றால் சரிதான். மங்கல்ரேவு ஓடையில் இருந்து வீராளாம்பட்டி கிராமம் சுமார் 2 அல்லது 3 கிமீ தூரம் இருக்கும். போலிசார் இந்த கொலை வழக்கு பதிவு செய்திருந்த காரணத்தினால் தான்

என்னை மங்கல்ரேவு ஓடைக்கு அழைத்துச் சென்றார்கள். என்னை போலிசார் மங்கல்ரேவு கிராமத்திற்கு அழைத்துச் சென்ற போது, அமுதா என்ற கிராம நிர்வாக அலுவலரை நான் அங்கு பார்க்கவில்லை. அந்த கிராம நிர்வாக அலுவலர் திருமதி.அமுதா அவர்களை நான் இவ்வழக்கு சம்பந்தமாக போலிசாருடன் புலன் விசாரணைக்கு உதவியாக இருந்த போது பார்க்கவில்லை. என்னிடம் 1,2 எதிரிகள் ஆஜரான சமயத்தில் காரில் வந்தார்களா என்றால் எனக்குத் தெரியாது. 1,2 எதிரிகள் என்னிடம் ஆஜரான போது, நான் அவர்களிடம், ஏற்கனவே போலிசார் வழக்கு பதிவு செய்திருப்பதால் நீங்கள் போலிசாரிடம் சென்று ஆஜராகுங்கள் என்று சொன்னேனா என்றால் இல்லை. ஏன் என்றால், 1,2 எதிரிகளே, கொலை வழக்கு சம்பந்தமாக எங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அங்கு சென்றால் எங்களை துன்புறுத்துவார்கள் என்றும் அதனால் உங்கள் மூலமாகப் போகிறோம் என்று சொன்னார்கள். 1,2 எதிரிகள் அவ்வாறு என்னிடம் சொன்னவுடன், நான் உடனடியாக பேரையூர் காவல் நிலையத்திற்கு வரச் சொன்னார்கள். நான் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னவுடன், போலிசார் வேன் ஏறி வந்துவிட்டார்கள். போலிசார் எனது அலுவலகத்திற்கு வந்து, என்னையும், எதிரிகளையும் அழைத்துக் கொண்டு பேரையூர் காவல் நிலையத்திற்கு கூட்டிச் சென்றார்கள். அதசாஆ.2 அறிக்கையை நான் தான் எனது கைப்பட எழுதினேன். 1,2 எதிரிகள் கொடுத்த வாக்குமூலத்தை நான் பதிவு செய்ய எந்த சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. கிராம நிர்வாக அலுவலர்களுக்கான கையேடு உள்ள விபரம் எனக்குத் தெரியும். அதில், பிரிவு 3 ல் எவ்வாறு நாங்கள் வாக்குமூலம் வாங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாக்குமூலம் வாங்க வேண்டும் என்றால், அந்த வாக்குமூலத்தை, படிவத்தில் ஒரு அறிக்கையாக 3 நகல்கள் தயாரித்து, அதில் ஒரு நகலை காவல் நிலையத்திற்கும், மற்றொரு நகலை தாசில்தாருக்கும் மற்றொரு நகலை எங்கள் அலுவலக நகலாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அந்த

கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தை எழுதி, அந்த நபருக்குப் படித்துக் காட்டி, அவரது கையொப்பம் பெற வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வாக்குமூலத்தை வாக்குமூலம் கொடுத்த நபர்களிடம் படித்துக் காண்பித்து கையெழுத்து வாங்கப்பட்டது என்று அதசாஆ.2 அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலிசாருடன் 1,2 எதிரிகளை பேரையூர் காவல் நிலையத்திற்கு, நான், எனது கிராம உதவியாளர், 1,2 எதிரிகள் மற்றும் இரண்டு காவலர்கள் காவல் நிலைய வேனில் அழைத்துக் கொண்டு பேரையூர் சென்றோம். அந்த காவலர்கள் இரண்டு பேர், ஆய்வாளரா, சார்பு ஆய்வாளரா, காவலரா என்று எனக்குத் தெரியாது. வீராளாம்பட்டி கிராமத்திற்கு கிராம நிர்வாக அலுவலர் அமுதா ஆவார். 1,2 எதிரிகள் என்னிடம் குறிப்பிட்டு ஆஜராவதற்கு என்ன காரணம் என்று அதசாஆ.2 வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசாரிடம் புகார் கொடுத்தது நானா அல்லது கிராம நிர்வாக அலுவலர் அமுதா அவர்களா என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். சேடப்பட்டிக்கும் மங்கல்ரேவுக்கும் இடையே சுமார் 4 கிமீ தூரம் இருக்கும். நான் புகார் கொடுத்தது, பேரையூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர், பேரையூர் காவல் வட்டம் அவர்களுக்கு கொடுத்தேன். சேடபட்டியில் காவல் நிலையம் உள்ளது. அங்கு சார்பு ஆய்வாளர் அந்தஸ்தில் ஒருவர் பணிபுரிகிறார். சேடபட்டி காவல் நிலையத்திற்கு, பேரையூர் காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பாவார். 1வது எதிரி குடியிருக்கும் வீராளாம்பட்டி கிராமத்தில் சுமார் 100 குடும்பங்கள் உள்ளன. வீராளாம்பட்டியில் 1 வது எதிரி குடியிருக்கும் தெரு, வடக்குத் தெரு ஆகும். என்னிடம் காட்டப்படும் அதசாஆ.3 அத்தாட்சியை பேரையூர் காவல் நிலையத்தில் வைத்து கணினியில் தட்டச்சு செய்தார்கள். அதசாஆ.3ல் வீராளாம்பட்டி வடக்குத் தெருவில் உள்ள வீட்டில் இருந்து அந்த அத்தாட்சியில் சொல்லப்பட்டுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக

சொல்லப்படவில்லை. என் மூலம் குறியீடு செய்யப்பட்ட அதசாஆ.2 ஆவணத்தில், வழக்கு சம்பவம் நடந்தது 15.04.2017 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.04.2017 ம் தேதியிலிருந்து ஒரு மாதம் கழித்து தான் அதசாஆ.3 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதகாஆ.3 அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் எதிரி பெரியகார்த்திகேயன் என்பவர் வீட்டின் முன்பாக எடுக்கப்பட்டு ஆஜர் படுத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் முன்பாக என்று சொல்லப்பட்டுள்ளது, தெருவா அல்லது வேறு இடமா என்று குறிப்பாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. போலிசில் புகார் கொடுக்கப்பட்ட பின்னர், குற்றச் செயல் குறித்து போலிசார் விசாரணையின் போது, கிராம நிர்வாக அலுவலராகிய நான் உதவியாக இருக்க வேண்டும் என்று கிராம நிர்வாக அலுவலருக்கான கையேட்டில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1,2 எதிரிகள் என்னிடம் ஆஜராவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு சம்பவம் நடந்ததுள்ளதாக விபரம் எனக்குத் தெரியவந்ததா என்றால் இல்லை. போலிசார் என்னை கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் இருந்து கூட்டிச் சென்ற போது, சம்பவ இடத்தில் இருந்து என் முன்பாக பொருட்கள் எதுவும் கைப்பற்றட்டதா என்றால் இல்லை. அதற்கு முன்பாக, சம்பவ இடத்தில் இருந்து பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக விபரம் எதுவும் எனக்குத் தெரியாது. மங்கல்ரேவு ஓடைக்குப் பக்கத்தில் தரிசு நிலங்கள் உள்ளது. அது யாருக்குச் சொந்தமானது என்ற விபரம் எனக்குத் தெரியாது. நான் சொன்னது போல், சொன்ன தினத்தில், 1,2 எதிரிகள் என் முன்பாக ஆஜராகவில்லை என்றும், 1 வது எதிரி என்னிடம் எந்தவித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அதை எந்த நேரத்திலும் நான் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அதசாஆ.2 அறிக்கையின் முதல் பக்கத்தில் உள்ள பேரையூர் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த கடிதத்தில், நான் தேதி எதுவும் இடவில்லை. அதசாஆ.2

ஆவணங்கள் பின்னிட்டு போலிசார் சொல்லிக் கொடுத்தன் அடிப்படையில் என்னால் தயார் செய்து கொடுக்கப்பட்டு, உண்மைக்குப் புறம்பாக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல, என் முன்பாக எந்த பொருளும் அதசாஆ.3 ல் அடிப்படையில் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அத்தாட்சியில் போலிசாரால் உருவாக்கப்பட்டு, அதில் கொண்டுள்ள பொருட்களும் போலிசாரால் உண்மைக்குப் புறம்பாக உருவாக்கப்பட்டு, அந்த அத்தாட்சியில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதசாஆ.3 அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ள பொருட்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 14.05.2017 ம் தேதி 1,2 எதிரிகளை காவல் நிலையத்தில் ஆஜர் செய்த பின்னர் நான் திரும்பவும் எப்போது எனது அலுவலகத்திற்குச் சென்றேன் என்றால் அன்றைய தினம் சாயந்திரம் என்னுடைய அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன். இந்த வழக்கிற்கு முன்னர் நான் வீராளாம்பட்டி கிராமத்திற்குச் சென்றுள்ளேன் என்றால் அந்த ஊர் வழியாகச் சென்றுள்ளேன். 1 வது எதிரியின் குடும்பத்தைப் பற்றியோ, 1 வது எதிரியைப் பற்றியோ எனக்கு பரிட்சியம் இல்லை. போலிசார் சொல்லிக் கொடுத்தன் பேரில், உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை